1993 ஏப்ரல் 26]

முற்பகல் 10—30

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், திடீர் நகர், ஆலந்தூர் போன்ற பகுதிகளில் உள்ள குடியிருப்புவாசிகளில் 40 சதவீதம் பேர் என்னுடைய தொகுதி மக்கள். அவர்கள் ஆற்றோரமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு மழைக் காலங்களில் மிகப் பெரிய சோதனை ஏற்படுகிறது. மறைந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியில் 1985 ஆம் ஆண்டு தடுப்புச் சுவர் சில பகுதிகளில் கட்டி, அது இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அதைத் தொடர அரசு முன் வருமா ? இந்த ஆண்டு அதை நிறைவேற்ற எவ்வளவு பணம் அதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27—2—1986-ல் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு அதற்கான பரிசீலனையும் செய்யப்பட்டு, சுமார் 2 கோடி ரூபாய் செலவிலே அன்றைக்கு அந்தப் பணிகள் நடைபெற்றன. அதற்குப் பின்னாலே முழு பணிகளும் நடத்தி முடிக்க வேண்டுமென்று எண்ணி எவ்வளவு மதிப்பீடு என்று பார்த்ததில், அத்தனை பணிகளையும் செய்வதற்கு 14 கோடி ரூபாய்க்கு மேலே தேவையிருக்கிறது என்ற காரணத்தால் அரசிடம் நிதி இல்லாத நிலையில் நம்முடைய சென்னை குடிநீர்த் திட்டத்திலே உலக வங்கி உதவியோடு இத்திட்டத்தைச் செயல் படுத்தலாம் என்ற அளவிலே அதற்கான பணம் அனுமதிக்க முடியுமா என்று சென்னை குடிநீர்த் திட்டத்தோடு பேசி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அதற்குப் பின்னாலேதான் இந்தத் தொகை ஒதுக்கீடு பற்றி விரிவாகக் கூறமுடியும். அத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 468 திரு. எ. தா. பொன்னுவேல், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

468—

வரகூர் தொகுதி ஏரிகளை ஆழப்படுத்தும் பணி

*9782—திரு. எ. தா. பொன்னுவேல் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் வரகூர் தொகுதியில் உள்ள நீர்ப்பாசன ஏரிகளான, எழுமூர் ஏரி, காருகுடி ஏரிகளை நடப்பு நிதியாண்டில் ஆழப்படுத்தும் பணி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எ. தா. பொன்னுவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சொந்த ஊரான எழுமூரில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பின் கீழ் வரும் பெரிய ஏரிகள் அது. சுமார் 750-லிருந்து 1,000 ஏக்கர் வரை நிலப்பரப்பு பாசனம் செய்து வருகிறது. கோடைக் காலத்திலும் தண்ணீர் இருக்கும். இருபோகம் சாகுபடியும் செய்யும் அளவுக்கு அது உதவுகிறது. நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அனுமதித்து 'ஆம்' என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைக் கூறி, அதை இந்த நிதி ஆண்டிலேயே தொடங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த எழுமூர் ஏரியிலே மண் அரிப்பு ஏற்பட்டு அது தற்காலிகமாகச் சரிசெய்யப்பட் டிருக்கிறது. இப்போது ஏரியில் நீர் இருக்கின்ற காரணத்தால் அதற்கான முழு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. எவ்வளவு செலவாகலாம் என்று மதிப்பீடு வந்ததற்குப் பின்னாலே நடவடிக்கையை விரைந்து எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. தா. பொன்னுவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 469. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

469—

ஆரணி தொகுதி கிராமங்களில் குறைந்த மின்அழுத்த மின்சாரம்.

(*) 10296—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, ஒண்டிக்குடிசை, வெள்ளேரி, சங்கீதவாடி ஆகிய கிராமங்களுக்கு குறைந்த மின் அழுத்த மின்சாரம் உள்ள தால் விவசாய மோட்டார்கள் அடிக்கடி பழுதாகி விடுவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?